**This question paper consists of 31 questions and 8 printed pages.**
* 8 பக்கங்களைக் கொண்ட இவ்வினாத்தாளில் 31 வினாக்கள் உள்ளன.

**Roll No.** | | | | | | | | | | | | **Code No. 44/S/A/TM**

# TAMIL
# (தமிழ்)
# (237)

தேர்வு நடைபெறும் நாள் மற்றும் தேதி : ____________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : **1.** ____________________

**2.** ____________________

---

**I. பொதுக்குறிப்புகள் :**

**1** தேர்வு எழுதுவோர் தங்களின் வரிசை எண்ணை (Roll No.) வினாத்தாளின் முன்பக்கம் எழுத வேண்டும்.

**2** வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் வினாத்தாளின் முன்பக்கம் அச்சாகியுள்ள வினாக்களின் எண்ணிக்கையும் மொத்த பக்கங்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளனவா என்பதையும் அனைத்து வினாக்களும் வரிசையாக உள்ளனவா என்பதையும் சரிபார்க்கவும்.

**3** பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A, B, C, D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

**4** பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்கள் உட்பட அனைத்து வினாக்களும் குறிப்பிட்ட நேரத்திற்குள் எழுதி முடிக்கப்பட வேண்டும். பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதும் வினாக்களுக்காகத் தனியாக நேரம் எதுவும் கொடுக்கப்படமாட்டாது.

**5** வினாத்தாளில் ஏதேனும் அடையாளக் குறிகள் இட்டாலோ அல்லது தேர்வு எழுதுபவர் தனது எண்ணை அதற்கென ஒதுக்கப்படாத இடத்தில் எழுதினாலோ தேர்வு எழுதுபவர் தேர்வு எழுதும் தகுதியை இழக்க நேரிடும்.

**6** உங்களது வினாத்தாளின் எண்ணை விடைத்தாளில் எழுதுங்கள்.



www.cbseportal.com

Download From: http://cbseportal.com

**பொதுக்குறிப்புகள் :**

பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து விடையளிக்கும் போது கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் (A, B, C, D) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுத வேண்டும்.

# TAMIL
# (தமிழ்)
# (237)

கால அளவு : **3** மணி நேரம் ] [ மொ. மதிப்பெண் : **100**

**குறிப்பு : (1)** எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.

**(2)** வினாக்களை நன்கு புரிந்துகொண்டு விடையளிக்க.

**(3)** பொருத்தமான விடையை எழுதுக.

**1** யார் இவ்வுலகில் நீடு வாழ்வார் ? **1×11=11**

(A) அரசனை வழிபடுவர்கள்

(B) இறைவனை வழிபடுவர்கள்

(C) வீரனை வழிபடுவர்கள்

(D) நண்பனை வழிபடுவர்கள்

**2** உரிமைச் செம்பயிருக்குத் தமிழ் என்னவாக இருக்கிறது ?

(A) வேர்

(B) பழம்

(C) இலை

(D) காய்

**3** தமிழணங்கே - பிர்த்து எழுதுக

(A) தமி + ழணங்கே

(B) தமிழ் + அணங்கே

(C) த + மிழணங்கே

(D) தமிழ + ணங்கே



Download From: http://cbseportal.com
www.cbseportal.com

4 விருட்சம் என்பதன் பொருள்
(A) காடு
(B) தோட்டம்
(C) செடி
(D) மரம்

5 பெண் வன்முறையை எதைப்போல சகஜமாக்கிக் கொள்கிறாள் ?
(A) தூங்குவது போல
(B) நடப்பது போல
(C) சாப்பிடுவதைப் போல
(D) கனவு காண்பது போல

6 மௌரிய ஆட்சியின் நினைவுச் சின்னமான அசோகர் தூண் எங்குக் காணப்படுகிறது ?
(A) சென்னை
(B) திருவனந்தபுரம்
(C) சாரநாத்
(D) டில்லி (தில்லி)

7 மொட்டை மரம் என்ற தலைப்பின் பொருள்
(A) பட்டுப்போன மரம்
(B) இலை உதிர்ந்த மரம்
(C) வெட்டப்பட்ட மரம்
(D) இதில் எதுவும் இல்லை

8 மழை பெய்தால் கம்மாயில் எது வந்து சேரும் ?
(A) தண்ணீர்
(B) மண்
(C) பூக்கள்
(D) குப்பை

9 புனல் என்ற சொல்லின் பொருள்
(A) காற்று
(B) நீர்
(C) நெருப்பு
(D) ஆகாயம்



www.cbseportal.com
Download From: http://cbseportal.com

**10** படைகளுக்கெல்லாம் தலைவராக விளங்குபவர்

(A) அமைச்சர்

(B) அரசர்

(C) படைத்தலைவர்

(D) பிரதம அமைச்சர்

**11** சிறந்த மனிதன் எத்தனை இயக்கங்களுக்கு ஒருமுறை தவறு செய்கிறான் ?

(A) 2000

(B) 1000

(C) 1500

(D) 3000

**12** கீழ்க்காணும் பகுதியைப் படித்து அதன்மூலம் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

இந்தியா பழம்பெரும் நாடு. இது பல்வேறு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநில மக்களும் ஒவ்வொரு மொழி பேசுவோராவர். ஆகவே மொழி அடிப்படையில் இந்தியாவின் மாநிலங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. இந்தி, மராத்தி, குஜராத்தி பஞ்சாபி, உருது, வங்காளி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் எனப் பல்வேறு மொழிகள் இந்தியாவில் உள்ளன.

சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறித்துவம், இசுலாம், சீக்கியம் எனப் பல மதங்களைக் பின்பற்றுவோரும் வாழ்கின்றனர். ஆயினும் இந்தியா எனும் ஒரு கூரையின் கீழ் வாழ்பவர்கள்.

பசுவின் நிறம் பலவானாலும் பாலின் நிறம் வெண்மைதானே ! அதுபோல மொழியால் மதத்தால் உணவு உடைகளால் வேறுபட்டாலும் நாம் இந்தியர் என்பதில் ஒருமைப்பாட்டுணர்வுடன் செயல்படுவர். இது ஒரு மாலையில் அமைந்த பல்வேறு பூக்களின் கூட்டமைப்பு போலாகும்.

(1) இந்தியா ஒரு ________ நாடு. **1**

(2) இது பல்வேறு ________ பிர்க்கப்பட்டுள்ளது. **1**

(3) மொழி அடிப்படையில் ________ பிர்க்கப்பட்டுள்ளன. **1**

(4) ________ நிறம் பலவானாலும் பாலின் நிறம் வெண்மைதானே ! **1**

(5) இந்தியாவில் பேசப்படும் மொழிகள் யாவை ? **2**

(6) இந்தியர் பின்பற்றும் பல்வேறு மதங்கள் யாவை ? **2**

(7) இந்தியர் எவ்வாறு செயல்படுவர் ? **2**

(8) இந்திய மக்களின் வாழ்க்கையை எதற்கு ஒப்பிடலாம் ? **2**



www.cbseportal.com

Download From: http://cbseportal.com

13 கீழ்க்காணும் பகுதி மூலம் கூறப்படும் வினாக்களுக்கு விடையளிக்க.

பெண்கல்வி சிறக்க வேண்டும்
பேராண்மை நிலைக்க வேண்டும்
பெண்களும் ஆண்களைப்போலப் பெருமையுடன் திகழ வேண்டும்
உண்மையொன்றே ஆளவேண்டும்
உயர்மறமே தழைக்க வேண்டும்
மண்ணெங்கும் தமிழே ஆண்டு
மாப்புகழில் மணக்க வேண்டும்.

(i) பெண்கள் கல்வியின் நோக்கம். 1

அ. குடும்பம் காத்தல்
ஆ. வாழ்வில் வளம் பெறல்
இ. ஆண்களோடு சமத்துவம் பெறல்

(ii) மண்ணெங்கும் - பொருள் கூறு. 1

(iii) மரம் - மறம் - பொருள் வேறுபாடு கூறுக. 1

(iv) இக் கவிதைக்கு ஒரு தலைப்பு தருக. 1

(v) உண்மையொன்றே ஆளவேண்டும் - இலக்கிய நயம் கூறுக. 2

14 தலைவன் தலைவியின் நட்பு எத்தன்மை வாய்ந்தது என்று குறுக்தொகை குறிப்பிடுகிறது. 1

15 உயிர் விதிப்படியே நடக்கும் என்பதற்கு புறநானூற்றுப் பாடல் காட்டும் உவமை யாது ? 1

16 மருது பாண்டியர் வாழ்ந்த ஊர்ப்பெயர் என்ன ? 1

17 எந்த ஒப்பந்தத் தொழிலாளர்களுக்காகக் காந்தி போராடினார் ? 1

18 கடிதத்தில் இறுதியாக எந்தப்புறத்தில் பெயருடன் கையொப்பம் இட வேண்டும் ? 1

19 (அ) நீர் நிறைந்த குடம் தளும்பி ஓசையை ஏற்படுத்தும் 1
சரியா ? தவறா ?

(ஆ) முழுமையான கல்வி அறிவு பெறாதவர் நிறை குடத்திற்கு ஒப்பாவர் 1
சரியா ? தவறா ?



Download From: http://cbseportal.com

(இ) எதிர்மறைச் சொற்களைக் கொண்டு நிரப்புக 2

(1) வரவுக்கு மேல் ________ செய்யக்கூடாது.

(2) இன்பத்தையும் ________ சமமாக எண்ண வேண்டும்.

(ஈ) அதே பொருள் தரும் வேறு சொல் தருக. 2

(1) மகிழ்ச்சி

(2) வேதனை

20 பின்வரும் மரபுத் தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைக்க. 2

(1) கதை கட்டுதல்

(2) பொடி வைத்தல்

21 கடிதத்தில் அனுப்புபவர் பெயரும் முகவரியும் அவசியம் ஏன் இடம் பெற வேண்டும் ? 1

22 தேர்விற்காகப் படிக்கும்போது ஒலிபெருக்கித் தொல்லை குறித்து ஒரு பத்தியில் குறிப்புரை எழுதுக. 4

23 கற்பதை விடக் கேட்டலே சிறந்தது - விளக்குக. 5

24 ஏழூர் உலாவரு விழாவில் அடியார்களின் பங்கு பற்றி எழுதுக. 5

**அல்லது**

தமிழிலேயே கையொப்பம் தரவேண்டும் என்பது குறித்த அறிவிப்பு எழுதுக.

25 (அ) புலி, புளி பொருள் வேறுபாடு கூறித் தொடரில் அமைத்து எழுதுக. 2

(ஆ) உறுமுதல், குரைத்தல் - இவை எவ் விலங்குகளுக்குரிய ஒலித்தலாகும் ? 2



www.cbseportal.com
Download From: http://cbseportal.com

26 ஒரு பள்ளியின் தகவல் பலகையில் இடம் பெறும் செய்திகள் குறித்து ஓர் அட்டவணை தயாரிக்க. 5

| வகுப்பு | மாணவர் எண்ணிக்கை | ஆ / பெ | சராசரி வயது |
|---|---|---|---|
| 1 | | | |
| 2 | | | |
| 3 | | | |
| 4 | | | |
| 5 | | | |

**அல்லது**

**பண அஞ்சல் படிவத்தை நிரப்பவும்**

**அனுப்புநர் பகுதி.**

ரூபாய் (எழுத்தால்) ____________________

(எண்ணால்) ____________________

**பெறுநர் பகுதி :**

பெறுநர் முகவரி : பெயர் ____________________

விலாசம் : ____________________

____________________

அஞ்சல் குறியீட்டு எண் : ____________________

பணம் அனுப்பும் நாள் : ____________________

அனுப்புநர் கையொப்பம் : ____________________

**பண அஞ்சல் ஒப்புகை :**

பண அஞ்சல் எண் : __________ நாள் : __________

அனுப்புநர் பெயர் : ____________________

முகவரி : ____________________

____________________

அஞ்சலகக் குறியீட்டு எண் : ____________________

தகவல் : ____________________

____________________



www.cbseportal.com

Download From: http://cbseportal.com

**27** சங்கு தேவனின் மர்மம் என்ற சிறுகதையில் மூன்று நிழ்ச்சிகளை விவரிக்க. **5**

**அல்லது**

மொட்டை மரம் என்ற சிறுகதையில் இடம் பெறும் இரண்டு பாத்திரங்களை விளக்குக.

**28** பிழை திருத்தம் செய்க. **5**

(i) எனக்குப் பாடம் படித்தேன்.

(ii) நீ நாளை வந்தாயா ?

(iii) கலைச் செல்வி நடனம் ஆடியது.

(iv) பறவை பறந்தன.

(v) மாடு புல்லை மேய்ந்தான்.

**29** தலைமை ஆசிரியரிடம் விடுப்பு வேண்டி ஒரு விண்ணப்பம் வரைக. **8**

**அல்லது**

உன் அன்னைக்கு நலம் விசாரித்து ஒரு கடிதம் எழுது.

**30** பின்வரும் தலைப்புகளுள் ஒன்று பற்றி விளக்கி எழுதுக. **6**

அ. மாணவர் கடமை

ஆ. பொங்கல் விழா

இ. என் பொழுது போக்கு.

**31** இருநூறு சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக. **10**

அ. அறிவியல் வளர்ச்சி

ஆ. பெண் கல்வி

இ. தேசிய ஒருமைப்பாடு.

---



Download From: http://cbseportal.com
www.cbseportal.com